விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆனி 26 திங்கள் (9-7-68) ரபி: ஆகி. 12 புத்தகம் 22 இதழ் 41




## இன்று கொழும்பில் கூடும் செயற்குழு தீர்மானிக்கும்

# தமிழரசார் வெளியேறுவர்?


**தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுமா? இக்கேள்வி இப்பொழுது மீண்டும் அரசியல் வட்டாரங்களில் சூடுபிடித்துள்ளது. இன்று (9-7-68) கொழும்பில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் இப்பிரச்சினை விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. செயற்குழுவிலுள்ள சக்தி வாய்ந்த கோஷ்டியொன்று அரசாங்கத்திலிருந்து கட்சி உடனடியாக வெளியேற வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தி வருவதாக அறியப்படுகிறது.**

மாவட்ட சபைகள் மசோதாவைக் கொண்டு வருவதில் இதுவரை பிரதமர் காட்டி வந்த உறுதி இப்பொழுது தளர்ந்து வருவதனுல், இனியும் மாவட்ட சபைகள் மசோதா வருமென நம்பி அரசாங்தில் இருந்து பிரயோசனமில்லை என்று தமிழரசுப் பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

மாவட்ட சபைகள் மசோதாவைக் கொண்டு வருவதில் பிரதமர் 'வழவழாக்' கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறுர்: எனவே இனியும் பிரதமர் மீது நாங்கள் நம்பிக்கை வைக்க முடியாது. இந்நாட்டுச் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் பெரும்பான்மை சிங்கள மக்களின் நியாயமற்ற எதிர்ப்புக்கு அஞ்சி தயக்கம் காட்டி வரும் பிரதமருடன் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் தொடர்ந்தும் எப்படி ஒத்துழைக்க் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்டசபை மசோதாவை அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்தை அடுத்துக் கொண்டு வருமா என்பது குறித்தும் அப்படிக் கொண்டுவரத் தவறிஞல் அரசாங்கத்துக்குக் கொடுத்து வரும் ஆதரவைக் கட்சி வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமா என்பது பற்றியும் இன்று கூடும் தமிழரசு செயற்குழுக் கூட்டத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)




## வடக்கு கிழக்கில் சிங்களவரை பெருமளவில் குடியேற்ற வேண்டுமாம்

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பெருமளவில் சிங்களவரை அங்கு கொண்டு சென்று குடியேற்ற வேண்டும்'' இவ்வாறு களனியில் நடைபெற்ற மாவட்டசபை எதிர்ப்புக்கூட்டமொன்றில் பேசிய திரு. ஹேமா பசநாயக்கா கூறிஞர். அவர் மேலும் சொன்னதாவது:—

'மாவட்ட சபை மசோதா சிங்கள மக்களின் உரிமைகளைப் பறித்துவிடக் கூடியது. செல்வநாயகம் நாட்டைப் பிரித்து வடக்கு கிழக்கில் ஒரு தமிழ் இராச்சியத்தை நிறுவும் திட்டத்துடன் இருக்கிறுர். அவரைப் பெருமளவு தமிழர்கள் ஆதரிக்கின்றுர்கள். தமிழர்கள் தமிழரசுக் கட்சியை ஆதரிப்பது இயற்கையானது.

ஆனுல் தமிழ் காங்கிரஸ் தலைவரான திரு. பொன்னம்பலமோ, சிங்களவர்களுடன் இணைந்து வாழ வேண்டுமென்று விரும்புகிறுர். நாடு பிரிக்கப்படக் கூடாதென்றும் அவர் கூறுகிறுர். ஆகவேதான் அவரும் மாவட்ட சபைகளை எதிர்க்கிறுர்.

'ஒரு தமிழரான திரு. பொன்னம்பலமே தமிழருக்கு நன்மையளிக்கும் மாவட்ட சபைகளை எதிர்க்கும் போது, ஒரு சிங்களத் தலைவரும் தேச பிதாவின் மகனுமான பிரதமர் ஏன்தான் மாவட்டசபைகளைகொண்டு வர உறுதியாக இருக்கிறுர் என்பதுதான் எனக்கு புரியவில்லை. தமிழரசுக் கட்சிக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான் பிரதமர் முயலுகிறுர். பிரதமர் முயற்சியை தேசப்பற்றுள்ள சிங்களவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும்'

### அவரது அச்சம்

மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால், தனித் தமிழ் இராச்சியம் ஒன்று இலங்கையில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். யாழ்ப்பாணம், மன்ஞர், வவுனியா, திருமலை, மட்டுநகர், அம்பாறை ஆகிய பகுதிகள் பூகோள ரீதியில் மட்டுமல்லாது மொழியாலும் கலாசாரத்தாலும் ஒன்றுபட்டிருப்பதால், அவை ஒருங்கிணைந்து காலப்போக்கில் தமிழ் இராச்சியம் அமைப்பதற்கு மாவட்ட சபைகள் வழி வகுத்துவிடும்'

இவ்வாறு வண. மத்திபன்னசீக மகா நாயக தேரோ அச்சம் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரன் செய்தி ஊர்ஜிதமாகிறது

தமிழ் காங்கிரசுக்குள் இடது சாரிகள் அதிக அளவில் ஊடுருவி வருவதாகவும், இதனுல் திரு. பொன்னம்பலத்தின்கைபலமிழந்து வருவதாகவும் சுதந்திரன் 17-6-68 இதழில் ஓர் முன் பக்க முகப்புச் செய்தியை வெளியிட்டிருந்ததை வாசகர்கள் அறிவார்கள். இச்செய்தியை மேலும் ஊர்ஜிதமாக்கும் சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது.

கிளிநொச்சித் தொகுதிக்கு சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு. எஸ். டி. பண்டாரநாயகா சமீபத்தில் விஜயம் செய்த போது, திருவையாறு குடியேற்றத் திட்டத்துக்குள் நுழைவதற்கு அதிகாரிகள் அவருக்கு இடம் கொடுக்கவில்லையாம்.

திரு. பண்டாரநாயகாவை கிளிநொச்சித் தொகுதியிலுள்ள தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள்தான் மேளதாளத்துடன் வரவேற்று உபசரித்தனர்.

சீனசார்பு கம்யூனிஸ்ட் பிரமுகர்களுக்கு தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்களால் அளிக்கப்பட்ட இவ்வரவேற்பில் கிளிநொச்சிப் பட்டின சபைத் தலைவராக இருந்து அண்மையில் உயர் நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபைகளுக்கு அளிக்கப்படும் கடமைகள்!

## 1. பயிர்த் தொழிலும் உணவும்

(அ) விளைச்சல் கூடிய விதையைப் பெரும்படியாக் கலும் பகிர்ந்தளித்தலும்.

(ஆ) சீருறுத்திய நுணுக்கங்களையும், முறைகளையும் பயிர்த்தொழில் செய்யும் முறைகளையும் மக்களிடையே பழக்குதல்.

(இ) வளமாக்கிகளையும் சீரமைந்த கருவிகளையும் பகிர்ந்தளித்தல்.

(ஈ) பழ, காய்கறிச் செய்கை, மரம் நாட்டு தொடர் இகல்கள்.

(உ) செயற்கையுரம் இலை குழையுரம் என்பன பயன்படுத்தப்படுதலை ஊக்குவித்தல்.

(ஊ) பயிர்க்காப்பு, பயிர்த்தொழிற் போட்டிகள், தொடர் இகல்கள் என்பன.

(எ) நச்சுத்தாவரங்களைப் பூண்டோடழித்தல்.

(ஏ) கமப் பண்ணைகளுக்காகச் செய்துகாட்டு பாத்திகளை இடுதல், விதைப்பண்ணை மாதிரிகளைச் செய்து காட்டுதல் என்பன.

(ஐ) சிறிய நீர்ப்பாசன வேலைகளை அமைத்துப்பேணி வருதல்; கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள்.

(ஒ) கிராமக் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும்.

## 2. விலங்கு வேளாண்மை

(அ) விலங்கு மருந்துச் சாலைகளையும் வெளியிட நிலையங்களையும் தாபித்து முகாமை செய்து பேணி வருதல்.

(ஆ) கால் நடை இனங்களையும், பண்ணை விலங்கினங்களையும், பறவை பண்ணைகளையும் மேம்படுத்தலும் அவற்றைப் பகிர்ந்தளித்தலும்.

(இ) விலங்குகளுக்கு வரும் தொடு நோய்களைக் கட்டுப்படுத்தல்.

(ஈ) கால்நடைகளுக்குக் குறிசுடுதலும் நலமடித்தலும்.

(உ) மேம்பாடான தீனியையும், ஊட்டத்தையும் அறிமுகப்படுத்தல்.

(ஊ) கால்நடைக் காட்சிகளையும் ஊர்வலங்களையும் ஒழுங்கு செய்தல்.

## 3. கைத் தொழில்களும் கடற்றொழில்களும்

(அ) குடிசைக் கைத்தொழில்களையும் சிற்றளவிலான கைத்தொழில்களையும் மேம்படுத்தி விருத்தி செய்தல்.

(ஆ) குடிசைக் கைத்தொழில்களினதும் சிற்றளவிலான கைத்தொழில்களினதும் பொருள்களைச் சந்தைப்படுத்துதற்கான வசதிகளை ஒழுங்கு செய்தல்.

(இ) விற்பனை நிலையங்களைத் தாபித்துப் பேணி வருதல்.

### மாவட்ட சபை மசோதா விபரங்கள்

(ஈ) நெசவுத் தொழில்களையும், கைத்தறி நெசவுகளையும், மின்தறி நெசவுகளையும் விருத்திசெய்தல்.

(உ) உள்ளூர் கலைகளையும் கைப்பணிகளையும் விருத்தி செய்தல்.

(ஊ) பொறிமுறைப்படகுகளையும் வாங்குவதற்காகவும், சாதாரண கலங்களைப் பொறிமுறைப்படுத்தற்காகவும், மீனவர்க்குக் கடன்கள் வழங்குதல்.

(எ) பனிக்கட்டி தயாரிக்கும் பொறித் தொகுதிகளையும் உப்புக் களஞ்சியங்களையும் தாபித்துப்பேணி வருதல்.

(ஏ) கடற்றொழிற் பழக்கு நிலையங்களைத் தாபித்துப் பேணிவருதல்.

(ஐ) உண்ணீர்க்கடற்றொழில் நிலையங்களை விருத்தி செய்தல்.

(ஒ) கடற்றொழில் நிலையங்களையும், தெருக்களையும், கடலோட்ட உதவிச் சாதனங்களையும் அமைத்தலும், தடைகளை அகற்றுதலும்.

(ஓ) மீனவர்க்கான வீடமைப்புத் திட்டங்கள்.

## 4. கிராமபுற அபிவிருத்தி

(அ) கிராம சேவகர்களின் இப்பரப்புக்களில் மேற்கொள்ளப்படுதம் முயற்சிகளை மேம்படுத்தி விருத்தி செய்து இயைபுபடுத்தும் நோக்கத்துக்கெனக் கிராம அபிவிருத்திகளை ஒழுங்கு செய்தல்.

(ஆ) கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளை, கிராம அபிவிருத்தி வேலைகளுக்காகப் பயிற்றுதல்.

## 5. வேலைகள், வீடமைப்புக்கள், பிரதேசத் திட்டமிடல் என்பன

(அ) உள்ளூராட்சி மன்றங்களாற் பேணப்பட்டு வரும் தெருக்கள், அல்லது பெருவழித்தெருக்கள் தவிர இயைபான அமைச்சரால் சபைக்கு ஒதுக்கப்பட்ட தெருக்களையும் பாலங்களையும் கட்டியமைத்துப் பேணி வருதல்

(ஆ) அவற்றின் பணிகளை நிறைவேற்றுவதற்காக மாவட்ட சபைகளுக்குத் தேவைப்படக்கூடிய கட்டடங்களைக் கட்டியமைத்தலும் பேணி வருதலும்.

(இ) குறைந்த செலவில் வீடுகளை அமைத்தற்காகக் கட்டடத் தேவைப் பொருள்களை வழங்குதல்.

(ஈ) குறைந்த செலவிற் கட்டடமமைக்கும் முறைகளைச் செய்து காண்பித்தல்.

## 6. கல்வி

(அ) பின்வருன பற்றிய விடயங்கள் நீங்கலாகவும் (ஆ) இல் காணப்படுவன குறிப்பாகச் சோத்தியாகவும் கல்விப் பணிப்பாளர் தலைமையதிபதியின் முன் கூட்டிய அங்கீகாரத்துடன் புதிய இளங் கல்லூரிகளைத் தாபித்துப் பேணிவருதல்;—

(i) பாடப் புத்தகங்கள் பற்றிய விவரணம்;

(ii) கட்டடங்களை நியமப்படுத்தல்;

(iii) கல்வி ஆராய்ச்சி;

(iv) ஆசிரியர்களைப் பயிற்றுதலும் நியமித்தலும்.

(ஆ) (i) ஊட்டம்;

(ii) மருத்துவப் பரிசோதனையும் மாணவர்களை நடாத்தும் முறையும்;

(iii) பால், சாப்பாடு ஆகியவை உதவுதல்

(iv) பொழுதுபோக்கு விளையாட்டுத் திடல்கள், உடற் பயிற்சி விளையாட்டுக்கள், போட்டிகள் என்பவற்றை மேம் படுத்தல் என்பனவற்றுக் கானவசதிகளை ஏற்பாடு செய்தல்;

(v) போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்தல்;

(vi) பாடசாலை நூலகங்களுக்கும் வாசிகசாலைகளுக்கும் ஏற்பாடு செய்து அவற்றைப் பேணிவருதல்;

(vii) பாடசாலை விடுதிகளாகப் பயன்படுத்துவதற்காகக் கட்டடங்களைக் கட்டிப் பேணிவருதல்;

(viii) பராயமடைந்தோர்க்கான கல்வியையும் இளஞ்சிறுர்க்கான கல்வியையும் மேம்படுத்தல்; அத்துடன்

(ix) முதனிலைக் கல்லூரிகளில் கட்டாயம் படித்தல் வேண்டும் என்பதை நடைமுறைக்கிடல்;

## 7. பண்பாட்டு அலுவல்கள்

(அ) கலைகள், கைப்பணிகள், பிரதேச தொல் பொருட்சாலைகள் என்பவற்றை மேம்படுத்தல்.

(ஆ) விழாக்களை ஒழுங்கு செய்தலுட்பட இலக்கிய

(7-ம் பக்கம் பார்க்க)

# தங்கு மடம்

### "சுமைதாங்கி"

"என்ன சுமையோடு போகிறீர்கள்? கொஞ்சம் இப்படி வாறீங்களா? உங்களைத் தானே! என்ன, வேறு எங்கே திரும்பிப் பார்க்கிறீர்கள்? வாசகர்களாகிய உங்களைத்தான் கூப்பிடுகிறேன். சுதந்திரனை எடுத்தவுடனேயே பக்கங்களைப் புரட்டி மட மடவென்று அரை மணி நேரத்தில் எல்லாவற்றையும் படித்து முடித்துவிட்டு அடுத்த இதழுக்காக நீங்கள் சுமையோடு காத்திருப்பதெல்லாம் எனக்குத் தெரியும்.

என்ன இருந்தாலும் இவ்வளவு அவசரம் கூடாது. சுமையை என் மேல் வைத்துவிட்டு இப்படி மடத்தில் சற்று நிம்மதியாக உட்காருங்கள்...ம்...

விஷயம் கனக்கக் கிடக்கு ...உங்களோடு அளவளாவ அதிக நாள் காத்திருந்தேன், ம்... ஏதோ ஆசிரியரின் தயவினல், இந்த இடத்தை வாடகைக்கல்ல ஓசியில் தான் அமர்த்தியிருக்கிறேன்.

ஆகவே நீங்களும் இனிமேல் வாரா வாரம், இப்படி இந்தப் பக்கமாக வரும் போது, என்னையும் கொஞ்சம் சந்தித்துப் போங்கோவன், சரி என்றுதான் சொல்லுங்களேன். சொல்ல மாட்டீர்களா?

பரவாயில்லை. இனிமேல் பத்திரிகையை எடுத்ததும் நீங்களாகவே என்னைத் தேடி இந்தப் பக்கம் வராவிடில் என் பெயர் சுமைதாங்கியில்லை. காரணம் விஷயம் கனக்கக் கிடக்கு, புரிஞ்சுதா? என்ன? முறைத்துப் பார்க்கிறீர்கள்?

'அதுதான் இங்கே நடக்காது' என்கிறேன்...என்ன பொத்தடா வாய்' என்கிறீர்களா? சரிதான் பொன்னண்ணையின் வாடை உங்களுக்கும் வீசிவிட்டதாக்கும்.

சரி நீங்கள் வாசகர்களாகிய எஜமானர்களல்லவா? பொத்திக்கொள்கிறேன். அடுத்த வாரம் உங்களை இதே பக்கத்தில் சந்திக்கிறேன். விஷயம் கனக்கக் கிடக்கு சேரியோ! வணக்கம்.

இன்னும் ஏன் நிற்கிறீங்க? அதுதான் சொல்லிவிட்டேனே அடுத்தவாரம் சந்திப்போம், சிந்திப்போம். போயிட்டு வாங்க.!!

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி, கொழும்பு -14.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதல் இரசிகன்

—"வன்னியூர்க் கவிராயர்"—

விடியுமட்டு மிராமகதை நாட்டுக் கூத்தை
பேஷாகக் கவனமுடன் பார்த்துக் 'கூத்து'
முடிந்த பின்பு 'ராமனுக்குச் சீதை என்ன
முறை?' என்றே கேட்டோரும் வாழ்ந்த
காலம்...

குடிசோடா, மலைப்பிஞ்சு, சாணிப்பேலை,
குஞ்சுவரா முதுமுட்டை, கதிரையன்ன
வடிவான பரிசுகளைக் கலைஞர்க் கீய
வக்கில்லாக் கஞ்சர்களே வாழ்ந்த காலம்...

★

டிக்கற்' றுக் 'கியூ' 'ஹவுஸ்புல்' 'தேர்ட்ச் ''செக்
கன்ற்' 'ஃபஸ்ற்'
ருக் 'கலறி, 'பல்கனி' யாற் பிரிந்திடாது
பக்குவமாய்ப் 'பாட்டிமுதற் 'பாப்பா' வீறுய்
பசும்புற்கம் பளத்தினிலே 'மிக்கட், ஆக
ஒக்கவிருந் திஞமாயே கலை விருந்தை
உண்டு மகிழ்ந் திடுகாலம்...ஒரு சாரார்க்கு
உட்காரப் 'பஞ்சமர்க்குப் பிரத்தியேகம்'
உண்டெனும் 'நோட் டீஸ்' அடிக்கத்
தெரியாக் காலம்...

★

பாற்கவர்ச்சி யெனும்மூல தனம்போட்டாற்தான்
பணப் பெட்டி நிறையும் என்போர் பருவமாதர்
கூச்சத்தைப் பயிர்ப்பு அச்சம், மடம், நாணத்தைக்
கொலைபண்ணி ரசிகர்கள்மேற் குற்றஞ்சாட்டி
நீச்சலுடை சிக் உடையில் அரை, கால், முக்கால்
நிர்வாணக் காட்சிகளைத் திரையிற் காட்டி
''போச்சுதெமர் பண்பையோ!' என்போர் கூற்றைப்
புறக்கணிக்கும் அளவறிவு போதாக் காலம்...

★

உடைப்பஞ்சம் அடித்த 'பிர பல ஸ்டாரை'
ஒளித்திரையில் பார்த்திடு நாகரிகமாதர்
நடைமுறையில் வாழ்வதையே சினிமாவாக்கி
நாட்டினில், றேட் டினில், வீட்டில் நடிகை
பாஷன்
கடைப்பிடித்துப் பிறேஸியர், கண்ணுடி நைலோன்
கழுத்துக் கையில்லாக் கால் காட்டும் 'ட்றெஸ்
ஸிங்'
உடைச்சரத்தா லுள்ளங்கள் தமைத்துளைத்தே
ஒழுக்கத்திற்கு (உ) லைவைக்காக் கலைவாழ்
காலம்...

★

மேடையிடத் தெரியாத காலம் சும்மா
வெறும்நிலத்திற் 'களரி' கட்டி 'வார்' வளைந்து
ஆடையா பரணங்கள் கிரீடம் செங்கோல்
அரசன் சேவுகன்சமமாய் அணிந்து ஆட்டம்
கோடையின்றி அனைவரும் ஆ டிக்களைத்தும்
சோராமற் துள்ளி நடித் திட்ட காலம்...
கோடையிலோர் கிராமத்தில் இரவு ஒன்றில்
கூத்தொன்றை ஆடினர்கள்...ரசிகர் சேர்ந்
தார்...

★

விடிந்துபனைப் பொழுதினில் மங்களமும்பாடி
விட்ட பின்பு...ரசிகர்களும் எழுந்தார் கூத்து
முடிந்ததென்று. முதல்ரசிகன் தன்னை நோக்கி
முசுப்பாத்திக் காயிரண்டாம் ரசிகன்தான்' 'எப்
படிக்காணும் கூத்து?' என்று கேட்க, முன்னேன்
பதிலிறுத்தான் வருமாறு; 'உடுப்பு, ஆட்டம்,
படிப்பெல்லாம் மோசமில்லை; ஆனுல் ஓர் ஆள்ப்
பாரமப்பா கூத்து!' என்றான் புதிர்ரூபத்தில்!

★

கூத்து ஒன்றோர் ஆட்பாரம்' என அன்னேனும்
கூறியதைச் செவியுற்றோர், அஃதே கூத்தைப்
பார்த்தவர்கள் பிரமித்தார் கருத்துத் தேரா
மற் திகைத்தார். முதல் ரசிகன் தன்னைப்
பிய்த்துக்
கூத்து ஒன்று ஆட்பாரம்' என்பதைத்தான்
கூறப்பா விபரமதாய்?' என்னக் கேட்டே
ஆத்திர முற்றனர். எனினும் புதிர் அவிழ்க்க
அந்த முதல் ரசிகனுக்கே முடியவில்லை.

★

முடிந்த தெனில் எவ்வண்ணம் ரசிகத் தேர்வில்
முதல் இடத்தை அவன் பெறுவான்? சூட்
சுமத்தை
விடியுமட்டும் கவனித்துப் பார்த்திருந்த
விவேகிகளிற் சிலர் அறிவார்; அம்மனேரில்
துடிப்பு நிறை வாலிபத்தோ(டு) எக்ஸ்—றேக்
கண்கள்
தொலை நோக்குங் கொண்டரண்டாம் ரசிகன்
அப்போ
வடிவாகக் 'கூத்து ஒன்று ஓராட்பாரம்'
வாய்ந்த கதை விளம்பினன் பின் வருமாறுமே!

(வேறு)

முதல் ரசிகன் நெட்டை; அவன் முதுகிற்குப் பின்னுலே
சுதியாயுட் கார்ந்தான் ஓர் 'சோட்'மனிதன்;
நாடகத்தின்
ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஆனமட்டுமே கழுத்தை
நீட்டினன் கூடவில்லை. நிமிடம் சிலநகர...
முழந்தாளில் மண்டியிட்டும் முதல் ரசிகன்
தோள்களிலே
அழகாகக்கையூன்றி யும்பார்த்தான்; வாய்க்கவில்லை.
ஆட்டமொன்று ஜோராக அரசன் வந்து ஆடுகையில்
'சோட்'நரனுக் குங்குஷியாய்ச் 'சுதியேற அவ்வேளை
ஒண்ணும் தம்பர்ரசிகன் உயர்மலைத்தோள்
ரண்டினிலும்
வண்ண அணிற் பிள்ளை பழத்தில் பெறுவாய்
ஏறுதலாய்
கால்கள் இரண்டினையும் கழுத்தின் வலம்—இடமாய்
மேல்வைத்தே கும்பத்தில் ஏறிவிட்டான்
'சோட்'மனிதன்
முதல்ரசிகன் தோள்மேலோர் முழு மனிதனேறியதோ
முதல் ரசிகனுக்குரசிப் பிற்தெரிய வேயில்லை.
கூத்துமுடியுமட்டும் கும்பத்தில் ஓராள் உட்,
கார்ந்ததையும் அந்த முதல் ரசிகன் தானறியான்
புலன் அனைத்தையுங் கலையிற் புகுத்திச் சுவைத்த
அந்தக்
கலாரசிகனுக்கஃது காணவில்லை வேற்றுமையாய்!
அந்த முதல்வன் அடியொற்றி யேகலையை
இத்தரையிலே சுவைத்தால் இன்பத்திற் கேது
பஞ்சம்?



# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி !!!

கே; கேட்க கேட்கக் கொடுக்கும் நீங்கள் யாரிடமாவது கேட்டிருக்கிறீர்களா?

ப: என் மனைவியிடம் கேட்டிருக்கிறேன். எதை என்கிறீர்களா?...மூச்...!

ஃ

ஜெ. சின்னத்தம்பி,
கொழும்பு.

கே: ஒருவன் வாழ்வில் முன்னேற வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?

ப: தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஃ

ஐ. நடன சபேசன்,
நெல்லியடி.

கே: அடுத்த தேர்தலில் தமிழரசு பூச்சியமாமே?

ப: இப்படி ஒரு தமிழ் காங்கிரஸ்காரர் உம்மிடம் சொன்னுரா?

கே: ஏன் தமிழரசு சமஷ்டி கொள்கையை கைவிடாதாம்?

ப: ஏன் தமிழரசையும் தமிழ் காங்கிரசுடன் எடைபோடப் பார்க்கிறீரோ?

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: மாவட்டசபை வெள்ளையறிக்கையை சிறீமா கொழுத்திவிட்டாரா?

ப: வெள்ளையறிக்கையையல்ல; தமது கணவரின் கொள்கையைத்தான் கொழுத்தி விட்டார்.

கே: கயிறு திரிப்புக்கு ஒரு உதாரணம் கூறுவீரா?

ப: மாவட்டசபை எதிர்ப்புக்கு ஜீ. ஜீ. கூறும் காரணங்கள்.

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு

கே: உலகில் கண்ணீர் விடாத மனிதன் யார்?

ப: கண்களற்ற மனிதன்!

ஃ

பா. இருதயமனோகரன்,
அல்வாய்

கே: அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரசுக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும்.?

ப: 0!

ஃ

கே. இராமநாதன்,
கிளிநொச்சி.

கே: கிளிநொச்சிப் பட்டின சபைக்கு திரு. ஆனந்தசங்கரி தேர்ந்தெடுக்கப் பட்டதை எதிர்த்து நடந்த வழக்கில் திரு. ஆனந்தசங்கரி சார்பில் வாதாடிய இராணி அப்புக்காத்து திரு. பொன்னம்பலத்தை தமது திறமையான வாதங்களினுல் தோற்கடித்த அந்த வழக்கறிஞரின் பெயரென்ன?

ப: அவரது பெயர் திரு. எஸ். சர்வானந்தா. இளம் வழக்கறிஞர்.

ஃ

எஸ். தெய்வீகன்,
வவுனியா

கே: அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்காதீர்கள் என்று 1956-ல் கூறிய பொன்னம்பலம் இன்றுதான் அப்படி கூறவில்லையென்கிறரே!

ப: அவரது அரசியல வாழ்வு குத்துக்கரணமும், உருட்டும் புரட்டும் நிறைந்தது என்பதுதான் எல்லோர்க்கும் தெரியுமே!

கே: ஜீ. ஜீ. யின் மார்ட்டின் அறிக்கை எதிர்ப்பு இறுதியில் எப்படியானது?

ப: புஸ்வாணம்தான்! மார்ட்டின் அறிக்கையின்படி ஜாம் ஜாம் என்று யாழ் மாநகர தேர்தல் நடைபெறப் போகிறது!

கே: மார்ட்டின் கமிஷன் அடிப்படையில் நடக்கும் யாழ். மாநகரசபைத் தேர்தலை பொ. கட்சி பகிஷ்கரிக்குமா?

ப: மாட்டார்கள். ஜீ. ஜீ. யிடம் அவ்வளவு தூரம் அரசியலில் யோக்கியம் இருக்கும் என்று நீர் கருதுகிறீரா?

ஃ

கே. இராமசாமி,
பதுளை

கே: ஆறுமுகநாவலர் சைவத்துக்கு ஆற்றிய தொண்டா, தமிழுக்கு ஆற்றிய தொண்டா அதிகம்?

ப: தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளே அதிகம். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை சீராக அச்சிட்டு, தமிழில் வசன நடையையும் பிரசங்கத்தையும் ஏற்படுத்தி, இன்னும் பல வழிகளில் அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் அனந்தம்.

கே: சிலர் நாவலரை 'சைவ வெறியர்' என்கிறர்களே!

ப: தவறு: அப்படியிருந்தால், கிறிஸ்தவ விவிலிய வேதத்தை அவர் தமிழில் மொழிபெயர்க்க மறுத்திருப்பார்!

ஃ

ம. ஸ்ரீகந்தராஜ்
அல்வாய் வடக்கு

கே: ஆலயப் பிரவேச இயக்கத்தில் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் சிறுபான்மைத் தமிழரைக் கைவிட்டதேன்?

ப: அவர் எப்போது அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்?

கே: மூன்று பேர் சேர்ந்து செய்யும் எந்த அலுவலும் சகுனப் பிழையாமே?

ப: தமிழினத்துக்கு 'அது' தானே இன்று சகுனப்பிழையாக இருந்துவருகிறது?

பி. பெரியசாமி,
மாநெலித்தோட்டம்.

கே: தொழிலாளி குற்றம் செய்தால் அதை முதலாளி கண்டிக்கிறுன். முதலாளி குற்றம் செய்தால் என்ன செய்வது?

ப: தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து முதலாளியைக் கண்டிக்க வேண்டும்.

ஃ

பெ. சந்திரசேகரன்,
தலவாக்கொல்லை.

கே: கேள்வி கேட்பவர்களுக்கு பதில் அளிப்பதில் உங்களுக்கு என்ன நன்மை உண்டு.

ப: கேள்வி கேட்பவரின் சந்தேகத்தை என்னுல் தீர்த்து வைக்க முடிகிறதே!

கே: நீங்கள் வேறேதும் தொழில் செய்கிறீர்களா? அது என்ன தொழில்?

ப: தகுதியற்ற கேள்விகளை கிழித்து எனது குப்பைக்கூடைக்குள் வீசும் தொழில்.

ஃ

பொ. கலைச்செல்வி,
சி. ஜானகி,
ஏழாலை மேற்கு

கே: அன்பு, பண்பு இவையிரண்டில் சிறந்தது எது?

ப: இருகண்களில் எந்தக் கண் சிறந்தது?

கே; தமிழர்களுக்கு பல அரிய சேவைகளைச் செய்ததாகப் பெருமையடித்துக் கொள்ளும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழர்களுக்குச் சிறிதாயினும் நன்மைசெய்யும் மாவட்டசபை மசோதாவை எதிர்ப்பதேன்?

ப: அதுதான் அவர்செய்யும் அரிய பெரிய 'நன்மை'!

கே: தமிழுக்கு அடுத்ததாக உங்களுக்குப் பிடித்தது எது?

ப: எனது பேனு!

ஃ

ப. சற்குணநாதன்,
கண்டி.

கே: நீதி, கடமை, பாசம் இம் மூன்றும் ஒரு உயர்ந்த மனிதனுக்கு ஏககாலத்தில் சோதனைப்படும் பொழுது எதை முதலிலும், இரண்டாவதும் மூன்றுவதுமாக கடைப்பிடிக்க வேண்டும்?

ப: நீதிவழுவாமல் கடமையைப் புரிந்து பாசத்துடன் வாழவேண்டும்?!

கே: நாகரீகமடைந்திருப்பதாகக் கூறப்படும் இவ்வுலகில் கொலை, களவு, கற்பழிப்பு, பொய் ஆகியன அதிகரித்ததின் காரணம்...?

ப; மனிதன் நாகரீகமென்ற போர்வையில் அநாகரீகத்துள் வீழ்ந்து விட்டதுதான்!

ஃ

'ஏர்வை மீரான்'
திருகோணமலை.

கே: குயுக்தியாரே! தமிழ் மொழிக்கு ஆதி இல்லை என்கிறுன் என் நண்பன். நான் உண்டு என்று சொல்கிறேன். இதில் யார்சொல்வது சரி'

ப; ஆதி இல்லாமல் எதுவும் இருக்க முடியாது. இது இயற்கை நியதி. தமிழும் இயற்கை நியதிக்கு கட்டுப்பட்டதுதான்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# புதிய ஊழியர்களும் சிங்களத் தேர்ச்சியும்

அரசாங்கசேவையில் 1956-ம் ஆண்டுக்குப் பின் சேர்ந்து சிங்களத்தில் தேர்ச்சி பெருத தமிழ் ஊழியர்களுக்கு — அதாவது 'புதிய ஊழியர்'களுக்கு — பெரும் நெருக்கடி ஒன்று இப்போது தோன்றியுள்ளது. 1965-ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் முயற்சியால் புதிய ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கான காலக்கெடு மூன்று ஆண்டுகளுக்குப் பின் போடப்பட்டது. அக்காலக் கெடு இந்த ஆண்டு ஜூன் 30-ம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. இக்காலக் கெடுவுக்குள் சிங்களத்தில் குறிப்பிட்ட தகுதியை அடையாத புதிய தமிழ் ஊழியர்களின் நிலையென்ன? அவர்களின் எதிர்காலம் என்ன என்பதற்கே உடனடியாகப் பதில் காண வேண்டி உள்ளது.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தாம் கட்டி எழுப்பி வருவதாகக் கூறும் தேசிய ஐக்கியத்துக்குத் தமது பதிலால் தாமே உலை வைக்கிறோம் என்பதையும் மறந்து — புதிய ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்குரிய கால எல்லை மேலும் நீடிக்கப்படமாட்டாது என்று பிரதமர் அறிவித்ததைத் தொடர்ந்தே இப்பிரச்சினை சிக்கலடைந்தது.

சிங்கள வெறியர்களினதும், எதிர்க்கட்சியினரதும் பிரச்சாரங்களுக்கும் அச்சமடைந்து—அடுத்த பொதுத் தேர்தலைப் பற்றி ஒரு கணம் எண்ணிப் பார்த்த நிலையில்தான்—பிரதமரது வாயிலிருந்து அந்தப் பதில் வந்திருக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

எனினும், தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்தபடி, பிரதமரது அறிவிப்பு நீக்குப் போக்குள்ள ஓர் அறிவிப்பாகவே காணப்படுகிறது.

பிரதமரது அறிவிப்பு, அரசாங்க சேவைக் கமிஷனின் நிர்வாக விதிகளுக்கு முரண்பாடாக இல்லை என்றும் நிர்வாக விதிகளின்படி ஒரு அதிகாரி தனது பதவியை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியா விடில், அது அந்த அதிகாரியின் சக்திக்கு அப்பாற்பட்ட செயலாகக் கருதப்பட்டு அவர் அத்தகுதியை அடைய மேலும் நியாயமான கால எல்லை அளிக்கப்படலாமென்றும் திரு. அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இப்பிரச்சினை சம்பந்தமாகத் தமிழரசுத் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசிய பின்னர், தங்கள் எதிர்காலம் குறித்து புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் அச்சப்படத் தேவை இல்லை என்று அறிவித்துள்ளனர்.

புதிய ஊழியர்கள் சிங்களத்தில் குறிப்பிட்ட அளவு தேர்ச்சியடைந்த பின்பு தான் அவர்களது வேலை உறுதியாக்கப்படும் என்பது அரசாங்கச் சட்டமாக இருக்கலாம். ஆனல் இது வெறும் சட்டப் பிரச்சினையாக மட்டும் கவனிக்கப்படக் கூடிய தல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இது மனிதாபிமானப் பிரச்சினைகூடவல்ல; இது ஓர் இனப் பிரச்சினை; சிங்கள, தமிழ் மக்களிடையேயுள்ள நல்லுறவுக்கும் உலை வைக்கக் கூடிய பிரச்சினையாகும்.

சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லை என்பதற்காகத் தமிழர்களை அரசாங்க வேலைகளிலிருந்து "துரத்தி"விட அரசாங்கம் நினைக்குமேயானல், அதன் பின்னர் இந்நாட்டில் எப்படித் தேசிய ஒற்றுமை ஏற்பட முடியும்? தமிழ்—சிங்கள நல்லுறவு வளர முடியும்?

ஆகவே அரசாங்கம், சிங்களத் தேர்ச்சி பெருத தமிழ் ஊழியர்கள் பிரச்சினையை வெறும் சட்டப் பிரச்சினையாகக் கருதாமல், இனப் பிரச்சினையாக, தமிழ்—சிங்கள உறவுப் பிரச்சினையாகக் கருதிச் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கான கால எல்லையை மேலும் நீடிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

அப்படியின்றிச் சிங்களத் தேர்ச்சி அடையாததற்காகத் தமிழ் ஊழியர்களின் வயிற்றிலடிக்கவோ, தண்டனை வழங்கவோ அரசாங்கம் முயற்சித்தால், அது தமிழ் இனத்துக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சமான நடவடிக்கையாகவே கருதப்படும்; அதன்பிரதிபலனுக அரசாங்கம்கட்டி எழுப்பி வந்த தேசிய ஐக்கியமும் ஈடாட்டம் காண நேரிடும் என்பதை முன் கூட்டியே எச்சரிக்க விரும்புகிறோம்.

இதே நேரத்தில் புதிய அரசாங்க ஊழியர் பிரச்சினையை வைத்துக் கொண்டு தமிழரசுக்கட்சி மீது மாசு கற்பிக்கப் பொருமை பொச்சரிப்புக் கொண்ட சிலரும் திரு. பொன்னம்பலமும் படாத பாடுபட்டு வருகிருர்கள்.

இந்நாட்டில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுமை இழைக்கப்பட்ட போதெல்லாம் அவர்களை அணைத்து அவர்களுக்காக வாதாடி வந்தது தமிழரசுக்கட்சிதான் என்பதை எந்த அரசாங்க ஊழியனும் மறுக்க முடியாது.

இடது சாரித் தொழிற் சங்கங்கள் வகுப்புவாத சங்கங்களாக—சிங்கள ஊழியர்களுக்குமட்டுமான சங்கங்களாக மாறியபோது—தமிழ் அரசாங்க ஊழியர்கள் திகைத்து நின்றனர். அந்நேரத்தில் உங்களுக்கென மொழி வழித் தொழிற் சங்கம் அமைத்து உங்கள் உரிமைகளுக்கு வாதாடுங்கள்; போராடுங்கள் என வழி யெடுத்துக்

# சுதந்திரன் நடத்திய கிளர்ச்சி வெற்றி பெற்றது!

## ஜீ. ஜீ. சூழ்ச்சி தவிடுபொடி!

## மார்ட்டின் கமிஷன் அறிக்கை அமுல்!!

யாழ் மாநகர வட்டார நிர்ணயம் சம்பந்தமான மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்த வேண்டும் என்று சுதந்திரனும தமிழ் மக்களும் சேர்ந்து நடத்திவந்த கிளர்ச்சிக்கு அரசாங்கம் செவிசாய்த்துள்ளது. யாழ். மாநகர சபையின் புதிய தேர்தல் மார்ட்டின் கமிஷன் சிபார்சின்படி வட்டாரங்கள் பிரிக்கப் பட்டு அதன் அடிப்படையில் நடத்தப்படுமென உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு.திருச்செல்வம் உத்தரவிட்டுள்ளார். யாழ். மாநகர மக்களின் அபிலாஷைகளுக்கமைய திரு. இ. எக்ஸ். மார்ட்டின் அவர்களால் மிகுந்த சிரமமெடுத்து வகுக்கப் பட்ட மிகச் சிறந்த வட்டார நிர்ணய அறிக்கையை அமுல் நடத்துவதற்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம் பலம் காட்டி வந்த எதிர்ப்பு இதனுல் முறியடிக்கப் பட்டு விட்டது.

தமிழ் மக்களுக்குக் கிடைக்க இருக்கும் எந்த ஒரு நன்மையையும் கிடைக்கவிடாது, அரசியலில் ஓர் தடைக்கல்லாக, நச்சுப் பொய்கையாக விளங்கி வருபவர் தமிழ் காங்கிரஸின் தலைவர் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். மார்ட்டின் அறிக்கையும் தமிழ் மக்களுக்கு — குறிப்பாக யாழ். நகர மக்களுக்குப் பெரு நன்மை அளிக்கும் ஒன்ருகும். அதையும் அமுல் நடத்தவிடாது தடுப்பதற்கு பொன்னம்பலம் எடுத்து வந்த சதி நடவடிக்கைகளை எல்லாம் அப்போதைக்கப்போது அம்பலப்படுத்தி, யாழ். மக்களின் குரலைத் திரு. பொன்னம்பலத்தின் வாதங்களுக்கு எதிராகத் திருப்பி விட்டதன் மூலம் மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்துவதற்குச் சுதந்திரன் எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளது கண்டு உவகையடைகிறோம். அத்துடன் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடித்து மார்ட்டின் அறிக்கையை அமுல் நடத்தச் செய்வதில் முன் நின்று உழைத்த நல்லூர் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதனையும் பாராட்டுகிறோம்.

யாழ். மாநகரசபையின் வட்டாரங்கள் சீராகப் பிரிக்கப்படவில்லையென்ற குறை யாழ். மாநகர மக்களிடம் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வந்தது. வட்டாரங்கள் வாக்காளர் தொகையைப் பொறுத்த வரையில் சமபலமற்றிருந்தன. சில வட்டாரங்கள் சிலருக்கு வசதியாக ஏற்படுத்தப்பட்டன. இதனுல், யாழ். மாநகர மக்கள் புதிய முறையில் வட்டாரங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

கொடுத்தது தமிழரசுக் கட்சி. இன்று அரசாங்க ஊழியர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் சாட்டில் தமிழரசுக்கட்சி மீது சீறிப்பாயும் திரு. பொன்னம்பலம் அன்று இருந்த இடமே தெரியவில்லை.

அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்க வேண்டாமென்று தமிழரசுக்கட்சியும் சுதந்திரனும் அன்று கேட்டுக்கொண்டது உண்மைதான். இதை நாம் மறுக்கவில்லை. அன்று திரு. பொன்னம்பலமும் இதே மாதிரி வேண்டு கோள் விடுவதற்கு மட்டும் பின்னிற்கவில்லை.

1956 முதல் 1964 வரை ஆட்சி புரிந்த சுதந்திரக்கட்சி, கூட்டரசாங்கங்கள் பழைய ஊழியர்கள் புதிய ஊழியர்கள் என்ற வேறுபாடின்றி எல்லா தமிழ் அரசாங்க ஊழியர்களிடத்திலும் சிங்களத்தை திணிக்க முயன்றது. எனவே தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு ஓர் சுமுகமான தீர்வு காணுமட்டும் அவர்கள் சிங்களம் படிப்பதை தமிழரசுக்கட்சியும் விரும்பவில்லை; நாமும் விரும்பவில்லை.

அத்துடன், 1956 முதல், 1964 வரை தமிழினம் சிங்களத்திணிப்பை எதிர்த்து போராட்டப்பாதையில் செல்லவேண்டியிருந்தது. எனவே தமிழ் பேசும் மக்கள் சிங்களத் திணிப்பை எதிர்த்து போராடி வரும் வேளையில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களமொழியை அதுவும் கட்டாயத்தின் பேரில் பயில்வது — தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தைப் பலவீனப் படுத்துவதாக இருக்கும் என்றும் கருதினேம்.

எனவே பழைய புதிய, ஊழியர் என்ற வேறுபாடின்றி சகல தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்களம் படிக்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1965ம் ஆண்டு பொதுத்தேர்தலுடன் ஐ. தே. கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது தமிழரசாங்க ஊழியர்கள் பிரச்சினைக்கு தமிழரசுக்கட்சி ஒரு சமரச தீர்வு காணக்கூடியதான சூழ்நிலை ஏற்பட்டது.

இத்தீர்வின்படி பழைய (அதாவது 1956 செப்டம்பருக்கு முன்பு அரச சேவையில் சேர்ந்த) ஊழியர்களுக்கு சிங்கள மொழியறிவு தேவையில்லையென்பதை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. தமிழாசிரியர்கள், சில்லறை ஊழியர்கள் போன்ற பல்வேறு துறையினருக்குச் சிங்கள அறிவு தேவையில்லை யென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது தமிழரசார் ஈட்டிய பெரும் வெற்றியாகும்.

ஆனல் 1956 செப்டம்பருக்கு பின்னர் சேர்ந்த எழுதுவினைஞர்களான புதிய ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி ஒரு குறிப்பிட்டளவு வேண்டும் என்ற கொள்கையை தமிழரசாரும் ஒப்புக் கொண்டு அதற்கென 3வருட கால எல்லையை (அதாவது 1968 ஜூன் 30வரை) பெற்றுக்கொடுத்தனர். தேர்ச்சியடைய வேண்டிய சிங்களத்தராதரமும் பெருமளவு குறைக்கப்பட்டது தமிழரசார் முயற்சியால்.

ஒரு பிரச்சினையில் சமரச ஏற்பாட்டுக்கு உடன்படும்போது நூற்றுக்கு நூறு வீதம் நமது கோரிக்கைகள் வெற்றியடையும் என்று எதிர்பார்க்க முடியாது. புதிய ஊழியர்கள் சிங்களம் பயில்வதற்கு ஒப்புக்கொண்டே வேலைக்கு சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் தங்கள் வேலைகளை உறுதியாக்கிக் கொள்வதற்காக குறிப்பிட்டளவு சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும் என்பதை தமிழரசுக்கட்சியும் ஏற்றுக் கொண்டிருப்பதாக சுதந்திரன் 19.11.66 இதழில் நமது அரசியல் நிருபர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், எப்படியிருப்பினும், எந்த ஒரு தமிழ் அரசாங்க ஊழியரும் குறிப்பிட்ட காலததில் சிங்களமொழிப் பயிற்சியடையாத காரணத்திற்காக வேலையிழப்பதையோ வேறு விதத்தில் தண்டனையடைவதையோ, தமிழரசுக்கட்சியினர் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பது மட்டும் உறுதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மையரின் உரிமைகளை வழங்குங்கள்! இல்லாவிட்டால்....!!

# சிங்களமக்களுக்கு வில்மட் விடுக்கும் எச்சரிக்கை!

பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் சிறுபான்மைமக்களுடனுன பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள உடனடியாக முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் ஆபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாமற் போய்விடலாம்' இவ் இலங்கையின் தேசியத் தலைவர்களில் ஒருவரும் அறிஞருமான திரு.வில்மட்ஏ.பெரேரா எச்சரித்துள்ளார்.

திரு. வில்மட்ஏ.பெரேரா மேலும் கூறியிருப்பதாவது:—

'தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டின் குடிமக்களே! இவர்கள் பெரும்பான்மையினராக இரு மாகாணங்களில் வசிக்கிறார்கள். இந்த இரு மாகாணங்களில் ஒன்றில், உலகிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருன திருமலை அமைந்திருந்திருக்கிறது. இது எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டிய ஓர் உண்மையாகும்.

'எங்கள் நாடு ஒரு சின்ன நாடு. ஆனால் இந்து சமுத்திரத்தில் இருப்பதால் அது முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1971ம் ஆண்டுடன் சிங்கப்பூரிலிருந்து இங்கிலாந்து தனது பாதுகாப்பு படைகளை வாபஸ் வாங்கப் போகிறது. ஒன்றுக்கு அதிகமான வல்லரசுகள் அந்த இடத்தை நிரப்புவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றன. இதுபற்றி பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகியுள்ளது. இதுவும் நாம் மனதில் வைக்க வேண்டிய மற்ருேர் விஷயம்.

'சிங்கள மக்களாகிய நாம், தமிழ் மக்களுடனும் ஏனைய சிறுபான்மையினருடனுமான எமது பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணவிட்டால்— சிறுபான்மைமக்கள் தங்களை ஆதரிக்க ஆர்வம் காட்டும் வெளி நாட்டு சக்திகளுடன் இணைய வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு நாள் அவர்களுக்கு ஏற்பட்டுவிடலாம்.'

## சுதந்திரன் நடத்திய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிக்கப்படுவதுடன் வட்டாரங்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமென்று கோரிவந்தார்கள். யாழ். மாநகர சபையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய வட்டார நிர்ணய கமிஷன் நியமிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை கோரி வந்தது.

யாழ். மாநகர சபையின் தேவையையும், மக்களின் அபிலாசையையும் உணர்ந்த அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர், திரு. ஏ. பி. ஜெயசூரியா 1964-ம் ஆண்டு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அவர்களைக் கொண்ட தனி நபர் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தி, யாழ்·மாநகர எல்லை விஸ்தரிப்பு, வட்டார விஸ்தரிப்பு பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்தார்.

திரு. சி. எக்ஸ். மார்ட்டின் மிகுந்த சிரமமெடுத்து, யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு கட்சிகள், பிரமுகர்கள், பொதுநலமன்றங்கள், ஆகிய சகலபகுதி மக்களின் அபிலாஷைகளையும் கேட்டறிந்த பின் அமைச்சரிடம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கை மிகச் சிறந்ததோர் அறிக்கையாக விளங்கியது. அவ்வறிக்கையில் தற்போதைய 17 வட்டாரங்களை 23 வட்டாரங்களாக்க சிபார்சு செய்திருந்தார். கொக்குவில் கிராமசபை, நல்லூர் கிராமசபை ஆகியவற்றின் பகுதியிலிருந்தும் சில பகுதிகளை எடுத்து அவற்றையும் ஒவ்வோர் வட்டாரமாக்கி, 25 வட்டாரங்கள் அமைக்க சிபார்சு செய்தார்.

மார்டின் அறிக்கைப்படி சிறுபான்மைத் தமிழர்களும் சில வட்டாரங்களில் போட்டியிட்டு வெற்றியடையக் கூடிய வாய்ப்பு இருந்தது. இவ்வறிக்கையில் இன்னேர் விசேடம், சகல வட்டாரங்களும் ஏறத்தாழ சம அளவு வாக்காளர்களைக் கொண்டிருப்பது தான்.

மார்ட்டின் சிபார்சுகளை ஏற்றுக் கொண்ட அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா, அவற்றை அமுல் நடத்த உத்தரவிட்டார். அப்போது திரு. பொன்னம்பலம் அதை எதிர்க்கவில்லை.

இக் கால கட்டத்தில் பொதுத் தேர்தல் வந்தது. எனவே மார்ட்டின் சிபார்சுகளை அமுல் நடத்துவது தடைப்பட்டது.

தேர்தலின் முடிவில் தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தது. உள்ளூராட்சி அமைச்சராக திரு. மு. திருச்செல்வம் பதவி ஏற்ருர். மார்ட்டினின் சிபார்சுகளை அமுல் செய்ய 'திரு' நடவடிக்கையெடுத்தார்.

### நச்சுப் பல்லி

அப்போது நச்சுப்பல்லி சொல்லியது. ஆம், திரு. பொன்னம்பலம், எதிர்ப்புக் குரல் கொடுத்தார். எந்த நல்ல காரியத்தையும் எதிர்த்துஎதிர்த்தேபழக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் மார்ட்டின் அறிக்கையை அமுல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். மார்ட்டின் அறிக்கையை அமுல் நடத்த விடமாட்டேன் என்று முழங்கினுர். மார்ட்டின் சிபார்சுகளை திரு. பொன்னம்பலம் எதிர்த்ததற்கான காரணம் சிறுபிள்ளைத்தனமானது. தம்மை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட திரு. மார்ட்டின் அச் சிபார்சுகளை தயாரித்தார்; ஆகவே அது கூடாது என்பதைத் தவிர வேறு எக் காரணத்தையும் திரு. பொ. வால் முன்வைக்க முடியவில்லை.

### சுதந்திரன் சவாலை ஏற்றது

திரு. பொ. வின் சவாலை சுதந்திரன் ஏற்றுக் கொண்டது. திரு. பொன்னம்பலத்தின் வாதங்களை பொடிப் பொடியாக்கியது. திரு. மார்ட்டின், தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவதென்று எண்ணிப்பார்க்காத காலத்திலே தயாரித்த சிபார்சுகளில் கட்சி அரசியல் எப்படி கலக்க முடியும் என்று கேட்டோம். ஏ. பி. ஜெயசூரியாவே மார்ட்டின் சிபார்சுகளை நிராகரித்து விட்டார் என்றதிரு.பொ.வின்வாதம் முழுப் பொய் என்பதை திரு. ஜெயசூரியாவின் கை எழுத்துடன் கூடிய கடிதத்தை வெளியிட்டு, அம்பலமாக்கினேம். மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுலாக்க வேண்டுமென்ற யாழ். நகர மக்களின் அபிப்பிராயத்தை வளர்த்து வந்தோம். அரசாங்கத்தையும் தூண்டி வந்தோம்,

### 'டூப்' தோற்றது

ஆனல் திரு. பொ. வோ வழமைபோல பல டூப்களை அலிழ்த்து விட்டார். மார்ட்டின் அறிக்கை அமுலாகாது என்று பிரதமர் தம்மிடம் தெழுவித்து விட்டார் என்றெல்லாம்'புழுகி' வந்தார்.

இறுதியில் திரு. பொ.வின் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டு விட்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட இரு வட்டாரங்கள் தவிர்த்து, மார்ட்டின் அறிக்கை அமுலாக்கப்பட்டு அதன்படி யாழ். மாநகர தேர்தல் நடைபெறப் போகிறது.

## "செல்வநாயகபுரத்தில்" 54 சிறுபான்மைத் தமிழர் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

அச்சுவேலியில் உள்ளூராட்சி அமைச்சினுல் வீடற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள வீடமைப்பு திட்டத்துக்கு 'செல்வநாயகபுரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயரை இதன் திறப்பு விழா வைபவத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் சூட்டினுர்.

இத்திட்டம் அண்மையில் திரு. திருச்செல்வத்தினுல் திறந்து வைக்கப்பட்டது. 54 வீடுகளும் 54 சிறுபான்மைத்தமிழ்க் குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன.

இத்திறப்பு விழாவில், தமிழரசுத்தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், கோப்பாய் பா. உ. திரு.சி. கதிரவேற்பிள்ளை, உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா, அச்சுவேலி கி. ச. தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுபான்மைத் தமிழர்களின் மேம் பாட்டுக்காக தமிழரசு அமைச்சர் எடுத்த முயற்சி நிறைவேறியது குறித்து விழாவில் பலர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## தமிழரசார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விவாதிக்கப்படுமெனத் தெரிகிறது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்ப்பதா? அல்லது எதிர்க்கட்சியிலிருந்தபடியே அரசாங்கத்தை கவிழாமல் பாதுகாப்பதா என்பன போன்ற பிரச்சினைகளும் அங்கு ஆராயப்படுமென்று அறியப்படுகிறது.

---

## சுதந்திரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தகங்கரியும் கலந்து கொண்டாராம். திரு. ஆனந்த சங்கரி ஓர் மாஜி இடதுசாரியென்பது தெரிந்ததே.

## உடுவில் கிராமசபை ஆதரவு

''மாவட்ட சபை மசோதாவை உடனடியாகக் கொண்டு வந்து நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும். தவறினுல் தமிழரசார் அரசாங்கத்திலிருந்து வெளியேறி ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கவேண்டும்.'' இப்படி யொரு தீர்மானத்தை உடுவில் கிராமசபை அதன் மாதாந்தகூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.


## வெளிப்படாத ஓர் இரகசியம்?

29 வருடங்களுக்கு முன்பு கொடுத்த வாக்கு இதுவரை தவறவில்லை: என்றைக்கும் தவறமாட்டாது. மந்திரம், வைத்தியம் இவைகளால் நிவாத்தியடைந்தவர்கள் லட்சக்கணக்கானவர்கள் சாட்சியம் அளிக்கிருர்கள்.

எனினும், எவருடைய பெயரோ, ஊரோ, நற்சாட்சிப்பத்திரமோ வானெலி மூலம் அல்லது பத்திரிகை மூலம் வெளிப்படை செய்யவில்லை. அதுதான் ரகசியம்.

தொழில் பெற, வியாபாரம், வேளாண்மை உயர்வடைய பரீட்சை, போட்டிகளில் வெற்றியடைய, மனப்பயம், கண்ணூறு,கிரகதோஷங்கள் தவிர்க்க, எந்த ஒரு கொடியவரையும் அடக்கி விட,வேண்டாதவர்களை விலகி நின்று,தனக்கு வேண்டியவர்களைக் கூட்டிக் கொள்ள, ஒற்றுமை நிலவ, திருமணம் நடைபெற, கணவர்-மனைவி பிணக்கு நீங்கிவிட, அவமரியாதை;தாழ்மை, பகை செய்பவர்கள் தண்டனை பெற, ஆண் பெண் இருசாராரின் இரகசிய ரோகங்கள், பலவீனம் ஆகிய ரோகங்களுக்கு துரித முறையில் குணமடைய எந்த ஒரு தோஷத்திற்கும் மற்றும் ஏனைய விஷயத்திற்கும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியம் வெளியிடமாட்டேன் எழுதுங்கள்.



அரசாங்க அனுமதி பெற்ற ஜோசிய மேதை

### பீ. எம். திஸ்ஸாநாயக்க,

நாலு தேவாலயங்களின் தர்மகர்த்தா,
கம்பளை — தொலைபேசி: 454,
கிளை - 103, ஶ்ரீ சங்கராஜ மாவத்தை,
மருதானை, கொழும்பு-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. ஜீ. க்கு

ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களே! மாவட்ட சபை மசோதா தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் என்று உங்கள் மனச்சாட்சி எடுத்துக் கூறியும் கூட, தமிழரசுக் கட்சியினர் கொண்டு வருகிறார்கள் என்பதற்காக அதை எதிர்க்கிறீர்கள். இதுதமிழர்களுக்கு நீங்கள் விளைவிக்கும் துரோகம் அல்லவா?காலத்துக்குக்காலம் பகிரங்க மேடைகளிலும். பத்திரிகைகளிலும் மாவட்டசபை மசோதாபற்றி பற் பல விதமான கருத்துக்களை கூறியிருக்கின்றீர்கள். இதிலிருந்து என்ன புலப்படுகிறது? எப்படியும் - என்ன செய்தென்றாலும் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டு வராமற் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காகவல்லவா?

'தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பேசும் மக்களுக்கு துரோகம் செய்து விட்டார்கள்' என்று கூறி வரும் நீங்கள் கடந்த கால் நூற்றாண்டாக தமிழ்ப்பேசும் மக்களுக்கு உருப்படியாகச் செய்தது ஒன்றுவது உண்டா? நீங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை ஒன்றும் செய்ய வேண்டாம்; தீமையாவது செய்யாமல் இருந்தீர்களா? தமிழரசுக்கட்சி உரிமைகளைப் பெறுதற்காக முயன்ற போதெல்லாம் ஒத்துழைப்புக்கொடுத்து ஆதரவளிக்காமல் சிங்களவர்கள் காட்டும் எதிர்ப்பைக் காட்டிலும் பன்மடங்கு எதிர்ப்புக்காட்டி உரிமைகளைப்பெற முடியாமல் தடுத்தவைகளை மறந்து விட்டீர்களா? 1957ம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றாமற் தடுத்த பெருமை உங்களுடையதல்லவா? இப்போது மாவட்ட சபை தமிழருக்குக் கூடாதென்று முட்டுக்கட்டை போட்டு குழப்பியடிப்பதற்கு முயல்கின்றீர்களா? அரசியலில் நீங்கள் செய்யும் கொடுமைகளுக்கு முடிவில்லையா?

இலட்சிய பலமில்லாத - நிலையற்ற கொள்கையுடைய நீங்கள் காங்கிரஸ் கட்சியின் ஆயுள் காலத் தலைவராகவிருந்து கொண்டு தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்யும் துரோகம் கொஞ்ச நஞ்சமா? வார்த்தைகளால் வருணிக்க முடியாது. வருங்காலத் தமிழ்ச் சந்ததியினர் பழைய அரசியல் வரலாற்றைப் படிக்கும்போது, "சீசீ...இப்படியும் எங்கள் மத்தியில் ஒரு தலைவன் இருந்தானா?" என்று உங்களைப்பார்த்து மனம் எரிவார்கள். வருங்காலச் சந்ததியினருக்காகவாவது நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருங்கள்.'

இவ்வாறு தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் வண்ணார்பண்ணைக் கிளை தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்துக்கு எழுதிய பகிரங்க கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 1970ல் ஜீ.ஜீ.யின் கொள்கை என்னவோ?

1945ல்- 50-50.(ஐம்பதிற்கு ஐம்பது) நடந்தது என்ன?

1947ல் - 'சோல்பரி அரசியல் அமைப்பை மாற்று. தவறினால் சுயநிர்ணய உரிமை கோருவோம்.

முடிவு என்ன?

1948ல் - தமிழ் மக்களின் எதிர்காலம் பெரும்பான்மையினத்தின் நல்லெண்ணத்திலும் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது.

இதை உண்டுபண்ணுவதற்கு உரிய வழியென்ன?

1953-55ல் 'டட்லி தமிழ் மக்களுக்கு நண்பன் கொத்லாவலை விரோதி. காரணம் தெரியுந்தானே!

1956ல் - முதலில் 'சம அந்தஸ்து அல்லது பிரிவினை. பின்னர்

'சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டு அதன் கீழ் சலுகை கோருவோம்'

1957ல் - (பண்டா-செல்வா ஒப்பந்தத்தை குழப்பியடித்து ஒன்றுமில்லாமல் செய்யும் நோக்கத்துடன்) சம அந்தஸ்து - பருத்தித்துறை தொட்டு தேவேந்திரமுனைவரை.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அன்று எதிர்த்த நீங்கள் உடன் மாற்றுத்திட்டம் தருவதாகக் கூறினீர்கள். இன்றுவரை ஏன் தரவில்லை?

1960ல் - "வட்டமேசை" வாயாலேதான் வட்ட மேசை மகாநாடு கூட்டப்படுகிறதோ!

1965ல் - 'சர்வாதிகாரமா? ஜனநாயகமா?' சர்வாதிகாரத்திற்கெதிராக தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகளுடன் தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டும்.

உங்களுக்கு தென்னிலங்கையில் சேருவதற்கு ஒரு சகதிதானே உண்டு.

1970ல் - (கட்சியிருந்தால்) என்ன கொள்கையோ?

# பகிரங்கக் கடிதம்

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:—

இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களுடைய விடுதலை இயக்கமாகிய இலங்கைத் தமிழரசுக்கட்சி என்னசெய்தாலும் சிந்திக்காமல் எதிர்ப்பது தான் உங்கள் கொள்கை. இதைவிட உங்கள் சிறிய கட்சிக்கு ஏதேனும் கொள்கையிருந்தால் கூற முடியுமா?

'முழுமையான - பூரண அதிகாரமுள்ள மாவட்ட சபை வந்தால் ஏற்பேன்' என்று இன்று கூறிவரும் நீங்கள் அன்று மிகவும் அதிகாரமுள்ள பிரதேசசபையை ஏன் ஏற்கவில்லை? இதிலிருந்து உங்கள் அரசியற் பித்தலாட்டம் புலப்படுகிறதன்றோ.

'இப்போது கொண்டு வரப்படும் மாவட்ட சபைக்கு கிராமசபைக்குரிய அதிகாரம் கூட இல்லை.' என்று கூறிவரும் நீங்கள், இவையெல்லாவற்றிற்கும் விரோதமான முறையில் மாவட்ட சபை வெள்ளையறிக்கை மீது பாராளுமன்றத்தில் 1968ம் ஆண்டு யூன் மாதம் 13ம் திகதி நடைபெற்ற விவாதத்தில் பேசியுள்ளீர்கள்.

'தமிழ்க்காங்கிரஸ் இந்த வெள்ளையறிக்கையில் அடங்கியுள்ள மாவட்ட சபை மசோதாவை ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் ஐக்கிய இலங்கையையே விரும்புகின்றோம். அபிவிருத்திக்கு ஐக்கியம் மிக அவசியமாகும். இக்கொள்கையை நாம் தொடர்ந்து கடைப் பிடித்து வந்துள்ளோம். இந்த மசோதா காலக்கிரமத்தில் பிரிவினைக்கு வழி வகுக்கும். இது நாட்டிற்குக் கூடாததாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலாவது உரிமைகளுடன் வாழலாம் என்று பிரிந்து வசழும் முறைக்காகப் போராடுபவர்கள் வீண் ஏமாற்றமேயடைவர். வெள்ளையறிக்கையின் கொள்கைகள் அமுலாக்கப் பட்டால் வறுமையான மாவட்டங்கள் மேலும் வறுமையடையும், செழிப்பான மாவட்டங்கள் மேலும் செழிப்படையும். மாவட்டசபை வெள்ளையறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல் வேறு எந்த நாட்டிலும் இல்லை.

இது உள்ளூராட்சி மன்றம் போலவும் இல்லை. மத்திய அரசாங்கத்தின் ஆட்சி போலவும் இல்லை, இரண்டிற்கும் இடைப்பட்ட சபையே இது. முன்னர் பண்டாரநாயக்காவின் பிரதேச சபையைக் கூட ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் இப்பொழுது அதிகாரமற்ற மாவட்ட சபைகளுடன் திருப்தியடைவது ஆச்சரியமாக இருக்கின்றது...... மாவட்ட சபைகள் அந்தந்த மாவட்டத்தில் கல்வித் துறைக்குப் பொறுப்பாக இருக்குமானால் நான் இதற்குரிய எதிர்ப்பை விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றேன் ...... எனக்கு எவரும் எஜமான் அல்ல. பிரதமருடன் நண்பன்என்ற முறையில் நான் ஒத்துழைத்து வருகின்றேன். நான் செய்த முயற்சியினால் தான் மாவட்ட சபைகள் மசோதாவில் சில திருத்தங்கள் கொண்டுவர முடிந்தது (பா வி. தொ. 78-இல 17, 13 யூன் 1968)

இது தானே நீங்கள் பேசிய பேச்சு! இப்பேச்சுக்குள்ளேயே வரிக்குவரி மாறுபட்ட கருத்துக்கள் நிறைந்திருக்கின்றனவே!

உங்கள் பேச்சில் ஐக்கிய இலங்கையையே நீங்கள் விரும்புவதாகக் கூறுகின்றீர்கள்.

இதை யார் தான் விரும்ப மாட்டார்கள். இந்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக மதிக்கப் படும் பொழுது எப்படி ஐக்கிய இலங்கை உருவாக முடியும்?

"ஐக்கிய இலங்கையை உருவாக்குவதுதான் எங்கள் குறிக்கோள். இக்கொள்கையை நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளோம்" என்று கூறிப் பெருமைப்படுகின்றீர்கள்.

கொள்கையை வைத்திருந்தால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுவதற்கு இதுவரை காலமும் ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றீர்களா?

"இந்த மசோதா காலக்கிரமத்தில் பிரிவினைக்கு வழி வகுக்கும்" என்றும் கூறியிருக்கின்றீர்கள்.

நீங்கள் மேற்படி கூறிய கருத்திலிருந்து காலக் கிரமத்தில் மாவட்ட சபைகளுக்கு அதிகாரங்களைப் பெற்று நல்ல நிலையில் வாழலாம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மாவட்ட சபைக்கு அதிகாரம் இல்லாதிருந்தால் எப்படிப் பிரிவினையை நாடிச் செல்ல முடியும்? தந்தை செல்வா, "தற்போது மாவட்ட சபைகளுக்குப் பூரண அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் காலக் கிரமத்தில் அதிகாரங்களைப் பெற்று விடலாம்" என்று கூறியதை உணர்ந்து ஒப்புக் கொண்டு விட்டீர்கள்.

"வெள்ளை அறிக்கையின் கொள்கைகள் அமுலாக்கப் பட்டால் செழிப்பான மாவட்டங்கள் மேலும் செழிப் படையும், வறுமையான மாவட்டங்கள் மேலும் வறுமையடையும்,"

இதன்படி பார்த்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்ட சபைகள் மேலும் செழிப்படையுமன்றோ!

"மாவட்டசபை வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல் வேறு எந்த நாட்டிலும் இல்லை. இது உள்ளூராட்சி மன்றம்போலவும் இல்லை; மத்திய அரசாங்கத்தின் ஆட்சி போலவும் இல்லை" என்று பேசியிருக்கின்றீர்கள்.

இதிலிருந்து மாவட்ட சபை மசோதா உள்ளூராட்சி மன்றத்திலும் பார்க்க மேலானதென்பதை ஒப்புக் கொண்டு விட்டீர்களே! உங்களின் முந்திய பேச்சுக்களுக்கெல்லாம் இது முரண்பாடானதாயிற்றே!

"முன்னர் பண்டாரநாயக்காவின் பிரதேச சபையைக் கூட ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் இப்பொழுது அதிகாரமற்ற மாவட்ட சபைகளுடன் திருப்தியடைவது ஆச்சரியமாக இருக்கின்றது" என்றும் பேசி இருக்கின்றீர்கள்.

நாம் உங்கள் பேச்சைக் கேட்டு ஆச்சரியப்படுகின்றோம். அன்று வரவிருந்த பிரதேச சபைகளை எதிர்த்தவர்கள் யார்? நீங்களா? அல்லது நாங்களா? பிரதேச சபை வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொண்ட நாங்களே அதை எதிர்ப்போமா? ஏன் சிறு பிள்ளைத் தனமாக வாயில் வருவதெல்லாவற்றையும் பேசுகின்றீர்கள்?

"மாவட்ட சபைகள் அந்தந்த மாவட்டத்தின் கல்வித் துறைக்குப் பொறுப்பாக இருக்குமேயானால் நான் இதற்குரிய எதிர்ப்பைத் தளர்த்திக் கொள்ளவும் தயாராக இருக்கின்றேன். என்கிறீர்கள்.

இந்த ஒரு அம்சம்மட்டும் அடங்கி இருக்குமேயானால் மாவட்ட சபை மசோதாவை ஏற்றுக் கொள்ளுவீர்களா? எதிர்ப்பை விட்டுக் கொடுத்து விடுவீர்களா? வேடிக்கையான பேச்சுஇது.

"எனக்கு எவரும் எஜமான் அல்ல. பிரதமருடன் நண்பன் என்ற முறையில் ஒத்துழைத்து வருகிறேன். நான் செய்த முயற்சினால் தான் மாவட்ட சபைகள் மசோதாவில் சில திருத்தங்களையாவது கொண்டுவர முடிந்தது." என்றும் பெருமை அடித்திருக்கிறீர்கள்.

ஆயுட்காலத்தலைவராகிய உங்களுக்கும் யாரும் எஜமான் ஆக இருக்க முடியுமா? நீங்கள் பிரதமருடன் தனிப்பட்ட முறையில் நண்பன் என்பதற்காகவா ஒத்துழைப்பு அளிக்கின்றீர்கள். தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையா? இக்கூற்றைக் கூறுவதற்கு உங்களுக்கு வெட்கமாகவில்லையா? நீங்கள் செய்த முயற்சியினால் தான் மாவட்டசபை மசோதாவில் ஒரு சில திருத்தங்களையாவது கொண்டு வர முடிந்தது என்று கூறியிருக்கிறீர்கள். மாவட்ட சபையே வேண்டாம் என்று சொல்லும் நீங்கள் ஏன் திருத்தங்களைக் கொண்டு வந்தீர்கள்? இதற்கு உங்களால் பதில் கூற முடியுமா?

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தப் பிசாசு

## அத்தியாயம்-23
## அசுர உருவம்

டாக்டர் மோசஸ் வீட்டிலுள்ள டிஸ்பென்சறியில் ஆறுதலாக உட்கார்ந்து 'பைல்' கட்டுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். வாசலில் நிற்கும் பையன் வந்து 'உங்களைப் பார்ப்பதற்காக பொலிஸ் இன்ஸ்பெக்டர் வந்துள்ளார். என்று கூறியதும் புன் சிரிப்புடன் அவர்களை வரும்படி கூறித் தலையாட்டினார். உள்ளே வத்த இன்ஸ்பெக்டர் அருள்நாதனுடன் சப் இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசன்.-டாக்டர் சிவகுமார் ஆகியோரும் வந்தனர். 'உட்காருங்கள்' என்று கூறிவிட்டுத் தாடியை உருவிவிட்டார். ஆழ்ந்த சிந்தனையில் மூளையைக் குழப்புகிறார் என்பதற்கு அறிகுறிதான். இருந்தவர்களை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையை ஆட்டியபடியே 'என்ன காரணம் பொலிசாரும் டாக்டரும் விஜயம் செய்துள்ளீர்கள்? என்று நகைச்சுவையாக அழகு தமிழில் கிண்டல் செய்தார். இன்ஸ்பெக்டர் அருள்நாதன் சில வேளைகளில் இப்படித்தான் பேசுவார். அதைப் போல டாக்டரும் கூறினார். அவருடைய பேச்சைக் கேட்ட அருள்நாதன் சிரித்தார்.

'மன்னிக்க வேண்டும் மிஸ்டர் மோஸஸ். உங்களைப் பற்றிப் பல பெட்டிசன்கள் வந்திருக்கின்றன. அதுபற்றி விசாரித்துப் போகலாம் என்று வந்துள்ளோம' என்றார் இன்ஸ்பெக்டர்.

டாக்டர் சிவகுமார் எப்போ பொலிஸில் சேர்ந்தார்'? என்று விஷமமாகக் கேட்டார் மோஸஸ்.

'வைத்திய விடயமாக உங்களைக் கலந்தாலோசிக்கையில் அவரது உதவி எங்களுக்குத் தேவை வரலாம் என்பதால்தான் கூட்டி வந்துள்ளோம்' என்றார் இன்ஸ்பெக்டர்.

யெஸ்...யெஸ் அவர் அமெரிக்கா சென்று வந்தவரல்லவா?' என்று மோஸஸ் கூறியபொழுது அதிலே ஒரு ஏளனம் தொனித்தது.

''மிஸ்டர் மோசஸ் நீங்கள் மூளை மாற்று வித்தை பயின்றவராயிருக்கலாம். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. உங்களில் உங்களுக்கு நம்பிக்கையிருந்தாலும் பிறர் விடயத்தில் நீங்கள் தவறிவிடுகிறீர்கள். எனக்கும் உங்களுக்கும் ஒரு கேஸ் சம்பந்தமான விடயமிருக்கிறது. அதை அறிந்து போக வந்தேன்' என்று சிவகுமார் கூறியதும் மோஸஸ் அசந்துபோய்விட்டார். பின்பு சமாளித்துக் கொண்டே' முதலில் உங்கள் விடயத்தைக்கூறுங்கள்' என்றார்.

'மிஸ் கீதாஞ்சலி சோமசுந்தரம் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அதாவது புதன்கிழமை மிஸஸ் பார்வதி சோமசுந்தரத்திடம் மூவாயிரம் ரூபாய் வாங்கினீர்களே ஏன்?' என்றார் சிவகுமார்.

மோஸஸ் திகைத்துவிட்டார். அப்படியொரு கேள்வியைச் சிவகுமார் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை. உடனே அவர் எதுவும் சொல்ல மறுத்துவிட்டார். சில நிமிடங்களின் பின்பு 'மிஸ்டர் சிவகுமார் நான் அவர்களிடம் மூவாயிரம் ரூபாய் வாங்கவில்லை. ஏன் கீதாவைப் பரிசோதிக்கச் சென்ற பொழுதுகூட 'பீஸ்' வாங்கவில்லை.' என்றார்.

'மிஸ்டர் மோஸஸ் நீங்கள் பொய் கூறுகிறீர்கள். நீங்கள் பணம் பெற்றதை நான் நிரூபிக்க முடியும். அந்தப் பணம் நீங்கள் பெற்றுக் கொண்டது மிஸ் கீதாவைக் கொலை செய்வதற்காக என்பதை நான் நிரூபிக்கப் போகிறேன். அது மட்டுமல்ல கீதா பாம்பு கடித்து இறக்கவில்லை.' என்று அவர் கூறிக்கொண்டிருக்கையில் இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்.

'பிளீஸ்' இன்ஸ்பெக்டர் முழுவதையும் கேளுங்கள். பாம்பு விஷம் கீதாவின் உடலில் ஏற்றப்பட்டிருக்கலாம். அந்த விஷம் டாக்டர் மோஸஸினால் கீதாவின் உடலில் செலுத்தப்பட்டது. அதற்குக் கூலியே மூவாயிரம் முற்பணம்.'

'வண்டர்புல் இமாஜினேசன் மிஸ்டர் சிவகுமார், என்றார் டாக்டர் மோசஸ்.

'கற்பனையில்லை மிஸ்டர் மோசஸ்- கீதாவின் உடலைக் கொண்டே நிரூபிக்கப் போகிறேன். இன்ஸ்பெக்டர் இவருடைய டயரியில் நான் குறிப்பிட்ட நாளில் எழுதப்பட்டிருப்பதை எடுத்துப்பாருங்கள்' என்று டாக்டர் சிவகுமார் கூறியதும் இன்ஸ்பெக்டர் எழுந்தார். அதற்கிடையில் துள்ளி எழுந்த மோஸஸ் பக்கத்திலிருந்த ஒரு விசையை அமுக்கினார். அடுத்த நிமிடம் அந்த அறையில் நீண்ட பற்களும் வளர்ந்த நகங்களும் கொண்ட ஒரு அசுர உருவம் இன்ஸ்பெக்டர், டாக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் உட்கார்ந்திருந்த இடம் நோக்கி வந்துகொண்டிருந்தது.


வளரும்

**கே. எஸ். ஆனந்தன்**

---

திரை விமர்சனம்

# பணமா? பாசமா?



'திரு .கே.எஸ். கோபாலகிருஷ்ணன் மக்களுக்காகப் படம் தயாரிக்கிறார். நான் எனக்காக தயாரிக்கிறேன்' என்று பணமா பாசமா படம் சென்னையில் 100வது நாள் வெற்றி விழாவைக் கொண்டாடிய போது டைரக்டர் ஸ்ரீதர் கூறியிருந்தார். பணமா? பாசமா? படத்தைப் பார்த்த போது ஸ்ரீதர் கூறியது எவ்வளவு தூரம் உண்மை என்பது புலனாகிறது.

பணம்,அந்தஸ்து, கௌரவம்-இவை ஒரு பக்கமும்—பாசம் மறுபக்கமுமாக பெண் ஒருத்தியின் மனதிற் புகுந்து நடத்தும் உணர்ச்சிப் பூர்வமான போராட்டத்தை சித்திரிக்கும் ஒரு கதையை உருவாக்கியிருக்கிறார் கோபாலகிருஷ்ணன். அந்தப்பாத்திரத்தை தாங்குகிறார் எல். வரலட்சுமி. பாத்திரத்தின் தன்மையை அப்படியே சித்திரித்து விட்டார் அவர்.

ஜெமினிகணேசனும், சரோஜாதேவியும் ஜோடி சேர்ந்திருக்கிறார்கள். சரோஜாதேவியின் நடிப்பு பல கட்டங்களில் மேலோங்கி நிற்கிறது.

இலந்தைப் பழக்காரியாக வந்து புதிய பாகத்தில் நடித்துள்ள விஜய்நிர்மலா நடிப்பு பிரமாதம். அவருக்கு ஜோடி நாகேஷ்.

டி. கே. பகவதியின் நடிப்பு தத்ரூபமாக இருக்கிறது. மற்றும் வி. எஸ். ராகவன், சிவகுமார், புஷ்பலதா எல்லோரும் இருக்கிறார்கள்.

இலந்தைப்பழம் பாட்டு—படம் முடிந்து வரும் போது எல்லோர் வாயிலும் முணுமுணுப்பதைப்பார்க்கலாம்.

மொத்தத்தில் படம் எப்படி என்கிறீர்களா? அலேக்! —உடனே சென்று பாருங்கள்.

---

# ஜீ. ஜீ.க்கு பகிரங்க கடிதம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் செய்த முயற்சியினால் தான் ஒரு சில திருத்தங்களையாவது கொண்டு வர முடிந்தது என்று சொன்னால் அம்மசோதாவின் அதிகாரங்கள் மேலும் கூடியிருக்க வேண்டும். ஆனால் பிரதம மந்திரி அவர்கள், ''தமிழரசார் கேட்ட மசோதாவிலும் பார்க்க இது அதிகாரம் குறைந்த மசோதா'' என்று பாராளுமன்றத்தில் கூறியிருக்கின்றார். நீங்கள் திருத்தங்கள் கொண்டு வந்திருந்தால் அம்மசோதாவின் அதிகாரம் மேலும் கூடியிருக்க வேண்டுமே. அப்படி இல்லாமல் பிரதம மந்திரி அவர்கள் கூறுவது போல் ஏன் அதிகாரம் குறைந்திருக்கின்றது? நீங்கள் மசோதாவின் மேல் கொண்டு வந்த திருத்தங்கள் மேலும் அதிகாரங்களைக் குறைக்கக் கூடிய திருத்தங்களா?

தமிழரசாரை இந்தநேரத்தில் எப்படியாவதுமசோதா பற்றிப் பேச வைத்து பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு ஏற்படுத்திய கதியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றீர்கள். இப்படிச் செய்வதன் மூலம் மாவட்ட சபையையே இல்லாமல் செய்து விடலாம் என்ற நப்பாசை தானே!

ஏமாந்து விடாதீர்கள். தமிழரசார் இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் எடுபட மாட்டார்கள். இப்போ நன்மையும் பேச மாட்டார்கள், தீமையும் பேச மாட்டார்கள். பேசுவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது.

தமிழரசார் என்ன கூறுகின்றார்கள் என்பதை இன்று இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றான். ஆகவே அவர்கள் கதைப்பதை பல முறை சிந்தித்தே கதைப்பார்கள்!

நீங்கள் எங்கு நின்று எப்படியும் பேசலாம். சின்னக் கட்சியின் தலைவராகிய உங்கள் பேச்சை யார் கவனிக்கின்றார்கள்?

புங்குடுதீவில் நடைபெற்ற ஒரு பகிரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில்,'உங்கள் எம். பி. செய்வதெல்லாம் சரி' என்று அங்குள்ள மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளீர்களாம். அந்த எம். பி. செய்வதெல்லாம் சரியென்று சொன்னால் நீங்கள் ஏன் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தீர்கள்?

பொருட் கட்டுப்பாட்டுச் சட்டம், அடையாள அட்டை மசோதா முதலியவற்றை உருவாக்கிய அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு-ஆதரித்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வந்து மேடையேறி இவற்றை எதிர்ப்பதாகப் பேசுவது தங்கள் இலட்சியப் பற்றையும் புத்திசாலித்தனத்தையும் தெளிவாகக் காட்டுகின்றது. இப்போலி எதிர்ப்பு தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத் தூவி ஏமாற்றும் தங்களுக்குக் கைவந்தகலை.

தமிழ் மொழி விசேட மசோதாவை முழு மூச்சாக நின்று எதிர்த்தீர்கள். இறுதியில் ஆதரித்தீர்கள். இப்போது தமிழ்ப் பேசும் மக்களுக்கு பெரும் நன்மை அளிக்கவிருக்கும் மாவட்ட சபையை மிக மும்முரமாக எதிர்க்கின்றீர்கள். இறுதியில்......ஏனெனில் டட்லி உங்கள் நண்பனல்லவா?

'தற்போது வரும் மாவட்டசபையை பெற்றுக்கொண்டால் காலக்கிரமத்தில் நாங்கள் அதிகாரங்களை கூட்டிப் பெற்றுக் கொள்ளலாம்' என்று தந்தை செல்வா கூறும் அறிவுரையைக் கேட்டு மாவட்டசபை மசோதாவை ஆதரியுங்கள். ஆதரிக்காவிட்டால் எதிர்க்காமலாவது இருக்கக் கூடாதா?

ஈழம் வாழ் தமிழ்ப்பேசும் மக்கள் என்றே மூவர்ணக் கொடியின் கீழ், தந்தை செல்வா தலைமையில் ஒன்று திரண்டுவிட்டார்கள். இதை உடைத்துவிடலாம் என்று எண்ணினால் அது பகற்கனவாகவே முடியும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள். 'நீங்கள் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நன்மை ஒன்றுமே செய்யவேண்டாம். தீமை ஏதேனும் செய்யாமல் இருந்தால் அதுவே தமிழ்ப் பேசும் மக்களுக்கு நீங்கள் செய்யும் நன்மையாக இருக்கும்.

---

# மாவட்ட சபைகளுக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளையும் பண்பாட்டு நிகழ்ச்சிகளையும் மேம்படுத்தல்.

(இ) இலக்கியப் பெறுமதியும் பண்பாட்டுப் பெறுமதியும் கொண்டனவான நூல்கள் வெளியிடப்படுதலை ஊக்குவித்தல்.

(ஈ) ஆசிரியர்கட்கும், கலைஞர்க்கும், கைப்பணி நுண்கலைஞர்க்கும் பரிசில்கள் வழங்குதல்.

## 8. ஆயுர்வேதம்

புதிய மத்திய ஆயுள்வேத மருந்துசாலைகளையும் மற்றும் துணைமையான சேவைகளையும் தாபித்து பேணிவருதல்.

## 9. சமூகநலன்

(அ) கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கும் உதவி நாடி நிற்கும் பிள்ளைகளுக்குமான

(ஆ) அனாதையரில்லங்கள்.

(இ) வயது வந்தோர்க்கான குடிசைவீடுகள்.

(ஈ) வயது குறைந்தோர்க்கு வாழ்வளித்தல்.

(உ) நன்னடத்தைப் பிணையிலுள்ள இளையோர்க்குப் புது வாழ்வழித்தலும் நலன் வாய்ப்புக்களை அளித்தலும்.

## 10. உடனலச் சேவைகள்

(அ) சுகாதாரமும் சூழல் உடனலக்கட்டுப்பாடும்.

(ஆ) கல்லூரி உடனலச் சேவைகள்.

(இ) பால்கட்டுதல்.

(ஈ) உடனலக் கல்வியை மேம்படுத்தல்.

(உ) சிறுவர்க்கான உடனல நிலையங்கள், பிள்ளைப் பேற்று நிலையங்கள், பிள்ளைகளுக்கான நலன் நிலையங்கள் என்பவற்றைத்தாபித்து முகாமை செய்து பேணிவருதல்.

(ஊ) சிறிய மருத்துவ நிலையங்களையும் மருந்துச் சாலைகளையும் தாபித்துப் பேணிவருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரைவில்: சிலோன்தியேட்டர்ஸ்திரைகளில்!

* எம். ஜி. ஆர் * சரோஜாதேவி * ஜெயலலிதா
* நம்பியார் * நாகேஷ் * கே. ஆர். ராமசாமி
* அசோகன் * மனோகர் * மாதவி நடிக்கும்

# அரசகட்டளை

3-வது வாரம்!

கெபிட்டி (கொட்டாஞ்சேனை)

முத்துராமன், தங்கவேலு
உதயசந்திரிகா, மனோரமா

—நடித்த—

## ரஜாத்தி

2-வது வாரம்!

செல்லமகால் (கொழும்பு)

ஜெய்சங்கர் ஜெயலலிதா
நம்பியார் புஸ்பலதா

—நடித்த—

## ராஜா வீட்டு பிள்ளை

இரண்டாவது மகத்தான வாரம்!

சிலோன் என்டடெயின்மென்ஸ் ஸ்தாபனத்தாரின் மாபெரும் வெளியீடுகளான 'திருடாதே' 'சித்தி' பட்டணத்தில் பூதம்' 'சாந்தி' ஆகியவற்றின் சாதனையையும் முறியடித்து விட்டது வசூலில்! தமிழ்க்கலாச்சாரம், பண்பு நாகரீகம், ஒழுக்கம் அத்தனையும் கொண்டு உருவாக்கப்பட்ட உணர்ச்சிமிகு உன்னத காவியம்!

செண்ட்ரல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருமலை)
ராஜேஸ்வரா (மட்டுநகர்) லிபர்ட்டி (ஹற்றன்)
றெக்ஸ் (பதுளை) மீபுர (நீர்கொழும்பு) மற்றும்திரைகளில்

● ஜெமினிகணேசன் ● சரோஜாதேவி
● நாகேஷ் ● விஜயநிர்மலா
● சிவகுமார் ● புஷ்பலதா
● டி. கே பகவதி ● எஸ். வரலட்சுமி
மற்றும் பலர் நடித்த

'இயக்குனர் திலகம்' கோபாலகிருஷ்ணனின்

# பணமா? பாசமா?



விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு

# நான் வருகிறேன்.

5வது வெற்றித்திருவாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)
அயன் (மன்னார்)

ஜெமினிகணேசன், அசோகன், நாகேஷ்
கே. ஆர் விஜயா புஷ்பலதா நடித்த

ஏ. வி. எம். புரொடக்ஷன்

# ராமு

எமது அடுத்த வெளியீடு!

ஜனாதிபதியின் தங்கப்பதக்கமும் சிக்காக்கோ சர்வதேசசிறப்பு விழாவில் பாராட்டுப் பத்திரமும் நியூயோர்க் டைம்சின் இலக்கியப் பரிசும் பெற்ற

# செம்மீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கைசிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்ஸ்தா பனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில்
1968-ம்வருடம் ஜூலை மதம் 9-ந்திகதி செவ்வாய் கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.